**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 135/ந/2024**

**நாள்.15.11 .2024**

திரு. T.கையும்கான்,
ஆற்காடு, இராணிப்பேட்டை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையாளர்,
ஆற்காடு நகராட்சி, இராணிப்பேட்டை மாவட்டம். – எதிர்மனுதாரர்

இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு, ஆற்காடு வட்டம், கதவு எண்.6/5, கொள்ளப்பாளையம் என்கிற முகவரியில் வசிக்கும் திரு. T.கையும்கான் என்பவரின் 01.12.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 07.12.2023 அன்று பெறப்பட்டு, 135/ந/2024 என்ற எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு வட்டம், கதவு எண்.6/5, கொள்ளப்பாளையம் என்கிற முகவரியில் வசிக்கும் திரு. T.கையும்கான் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார் :-

“இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு வட்டம், ஆற்காடு நகராட்சிக்குட்பட்ட கொள்ளப்பாளையம் பகுதியில் உள்ள தெருக்களில் கழிவுநீர் தேங்கி சுகாதார சீர்கேடு ஏற்பட்டுள்ளது என்றும் மேலும் மழைக்காலங்களில் மழை நீர் தேங்கி பொது மக்கள் சென்று வர

மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளது. இதன் காரணமாக, பால், கேஸ் சிலிண்டர், காய்கறி போன்ற அத்தியாவசிய பொருட்களை தெருவிற்குள் கொண்டு வர அனைவரும் அச்சப்படுவதால், இங்கு வசிக்கும் பொதுமக்களுக்கு பெரும் மன உளைச்சல் ஏற்படுகிறது. பல வருடங்களாக குடிநீர் குழாய் இணைப்புகள் பராமரிக்கப்படாததால். குடிநீருடன் கழிவு நீர் கலந்து பொதுமக்களுக்கு உடல்நிலை பாதிக்கப்படுகிறது.

மேற்கண்ட குறைகளை நிவர்த்தி செய்து தரும்படி நகராட்சி ஆணையர் அவர்களிடம் முறையிட்டும் அடிப்படை வசதிகள் செய்துதரப்படவில்லை. எனவே, பல ஆண்டுகளாக சந்தித்துக் கொண்டிருக்கும் இன்னல்களையும், மனவேதனைகளையும் கருத்திற் கொண்டு இம்மனுவை விசாரணைக்கு ஏற்று தக்க வழிவகை செய்து தருமாறும், வார்டு 05-ன் நகரமன்ற உறுப்பினர் மற்றும் நகராட்சி ஆணையர் ஆகியோர் மீதும் விசாரணை செய்து சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்குமாறும் இம்முறைமன்ற நடுவத்தைக்கேட்டுக்கொண்டுள்ளார்.

2. மனுதாரரின் புகார் மனு குறித்து ஆற்காடு நகராட்சி, ஆணையாளர் அவர்களிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 13.09.2024 நாளிட்ட அறிவிப்பின் மூலம் அறிக்கை கோரப்பட்டது.

நகராட்சி ஆணையாளர் தனது 20.09.2024 நாளிட்ட அறிக்கையில் ''மனுதாரரர் திரு.T.கையும்கான் என்பவர் தெரிவித்துள்ள இடமானது நேராய்வு செய்யப்பட்டது. மனுதாரர் தெரிவித்துள்ள இடம் ஆற்காடு நகராட்சி கட்டுப்பாட்டில் இல்லை, அந்த இடம் வக்ப் போர்டு நிர்வாகத்திற்கு சொந்தமானதாகும். மேலும் இந்த இடத்தில், நகராட்சியின் மூலம் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சாலைகள் அமைக்க வழிவகை இல்லை. இப்பகுதியில் அவ்வப்போது பொது சுகாதாரப் பிரிவு மூலம் துப்புரவு பணிகளை பொது சுகாதார நலன் கருதி சுத்தம் செய்யப்படுகிறது. மழைக்காலங்களில் சாலைகளில் மழைநீர் தேங்காத வண்ணம் சுத்தம் செய்து பராமரிக்கும் பணி நகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி இடத்தில் குடிநீர் விநியோகம் நல்ல முறையில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் துப்புரவு பணி மேற்பார்வையாளர்களை கொண்டு தினமும் கண்காணிக்கப்பட்டு பொது சுகாதாரம் நல்ல முறையில் இருக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது'' என தெரிவித்துள்ளார்.

3. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான ஆற்காடு நகராட்சி ஆணையாளர் ஆகியோரை 13.09.2024 நாளிடப்பட்ட கடிதத்தில் 08.10.2024 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறவிருக்கும் விசாரணைக்கு வருகை தந்து விளக்கம் அளிக்குமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4) மனுதாரர் திரு. T.கையும்கான் அவர்கள் 08.10.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :-

“இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு வட்டம், ஆற்காடு நகராட்சிக்குட்பட்ட கொள்ளப்பாளையம் பகுதியில் உள்ள தெருக்களில் கழிவுநீர் தேங்கி சுகாதார சீர்கேடு ஏற்பட்டுள்ளது. மழைக் காலங்களில் மழைநீர் தேங்கி பொதுமக்கள் சென்றுவர மிகவும் ஆபத்தான

நிலையில் உள்ளது. இதன் காரணமாக பால், கேஸ் சிலிண்டர், காய்கறி போன்ற அத்தியாவசிய பொருட்களை தெருவிற்குள் கொண்டு வர அனைவரும் அச்சப்படுகின்றனர். இதனால் இங்கு வசிக்கும் பொதுமக்களுக்கு பெரும் மன உளைச்சல் ஏற்படுகிறது. பல வருடங்களாக குடிநீர் குழாய் இணைப்புகளை பராமரிக்காததால் குடிநீருடன் கழிவுநீரும் கலந்து வருகிறது. அதனை பயன்படுத்தும் பொதுமக்களுக்கு உடல் நிலை பாதிக்கப்பட்டு மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர். மேற்கண்ட குறைகளை நிவர்த்தி செய்து தருமாறு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.தமிழ்ச்செல்வி அவர்களிடமும் நகராட்சி ஆணையாளரிடமும் பலமுறை முறையிட்டும், அவர்கள் எங்களை அலட்சியப்படுத்துகிறார்கள். மேலும் கொள்ளம்பாளையம் பகுதியில் குடிநீர் இணைப்பு வழங்கவதற்கு நகராட்சியினரால் உரிய தொகை பொதுமக்களிடம் வசூலிக்கப்பட்டும் மூன்று ஆண்டுகளுக்கு மேலாகியும் குடிநீர் வழங்கப்படவில்லை என்ற விவரங்களை தனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளுமாறு தெரிவித்துள்ளார்.

5) எதிர்மனுதாரான ஆற்காடு நகராட்சி ஆணையர் சார்பாக 08.10.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆற்காடு நகராட்சியின் சுகாதார அலுவலர் திரு. பாஸ்கர் மற்றும் இளநிலை உதவியாளர் திரு. சத்தியராஜ் ஆகியோர் விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நேரடியாக தங்களது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தின் முன் பதிவு செய்துள்ளார்கள்.

''மனுதாரர் தெரிவித்துள்ள இடம் வக்போர்டு இடம் என்பதால் நகராட்சி நிதி மூலம் கொள்ளப்பாளையம் பகுதியில் சாலை வசதி செய்து கொடுக்க இயலவில்லை. இப்பகுதிக்கு சட்ட மன்ற உறுப்பினர் அல்லது பாராளுமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து சாலை வசதி மற்றும் வடிகால் வசதி விரைவில் செய்து தருவதாக 5–வது வார்டு உறுப்பினர் திருமதி. தமிழ்செல்வி என்பவர் உறுதி அளித்துள்ளார். குடிநீர் விநியோகம் தொடர்பாக பழைய குடிநீர் குழாய் பைப்புகள் அனைத்தும் மாற்றப்பட்டு புதிய பைப்புகள் போடும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி விரைவில் முடிக்கப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் சீராக வழங்கப்படும்'' என தெரிவித்துள்ளார்கள்.

6) மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம் , ஆற்காடு நகராட்சி ஆணையரின் அறிக்கை, மற்றும் சுகாதார அலுவலர் திரு.பாஸ்கர் மற்றும் இளநிலை உதவியாளர் திரு.முத்தையா, ஆகியோரின் வாக்குமூலம், மற்றும் இதர ஆவணங்களை இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர் தனது புகார் மனுவில் கொள்ளப்பாளையம் பகுதியில் உள்ள தெருக்களில் கழிவுநீர் தேங்கி சுகாதார சீர்கேடு ஏற்படுவதாகவும், மழைக்காலங்களில் தேங்கியுள்ள மழைநீரால் அத்தியாவசியப் பொருட்களை தெருவிற்குள் கொண்டுவர இயலவில்லை என்றும், குடிநீருடன் கலந்துவரும் கழிவுநீரால் சுகாதாரகேடு ஏற்படுகிறது எனவும் குடிநீர் இணைப்பு வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

ஆற்காடு நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் சுகாதார ஆய்வாளர், இளநிலை உதவியாளர் தங்களது வாக்குமூலத்தில் மனுதாரர் தெரிவித்துள்ள இடம் வக்ப்போர்டு இடம் என்பதால் நகராட்சியின் நிதி மூலம் சாலைகள் அமைக்க வழிவகை இல்லை, எனினும் பொது சுகாதார நலன் கருதி, துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, மழைக்காலங்களில் சாலைகளில் மழைநீர் தேங்காத வண்ணம் சுத்தம் செய்வதோடு, குடிநீர் விநியோகம் நல்ல முறையில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், துப்பபுரவு பணி தினமும் கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் இப்பகுதி சட்ட மன்ற உறுப்பினர் அல்லது பாராளுமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து சாலை வசதி மற்றும் வடிகால் வசதி விரைவில் செய்து தருவதாக 5–வது வார்டு உறுப்பினர் திருமதி. தமிழ்செல்வி என்பவர் உறுதி அளித்துள்ள விவரத்தினையும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளனர்.

இந்நேர்வில் நகராட்சியினரால் குடிநீர் இணைப்பு வழங்குவதற்கு உரிய தொகை வசூலிக்கப்பட்டும் மூன்று ஆண்டுகளுக்கு மேலாகியும் குடிநீர் இணைப்பு வழங்கப்படவில்லை என தெரிவித்துள்ளதை கருத்தில் கொண்டு குடிநீர் இணைப்பு வழங்குவதற்கு உரிய நடவடிக்கை விரைந்து மேற்கொள்ள ஆற்காடு நகராட்சி ஆணையாளர் அறிவுறுத்தப்படுகிறார்.

மேலும் ஆற்காடு நகராட்சியின் சார்பாக விசாரணையில் ஆஜரான சுகாதார அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, 5–வது வார்டு உறுப்பினர் திருமதி. தமிழ்செல்வி என்பவர் உறுதி அளித்துள்ளவாறும் சட்ட மன்ற உறுப்பினர் அல்லது பாராளுமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து பொதுமக்கள் பயன்பெறும் வகையில் சாலை வசதி மற்றும் வடிகால் வசதி அரசு விதிமுறைகளை பின்பற்றி விரைவில் செய்து கொடுக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆற்காடு நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும், நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட விவரத்தினை 30 நாட்களுக்குள் அறிக்கையாக இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைக்க அறிவுறுத்தப்படுகிறது.

2024ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 15–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. T.கையும்கான்,
ஆற்காடு வட்டம், கதவு எண்.6/5,
கொள்ளப்பாளையம்,
ஆற்காடு வட்டம், இராணிப்பேட்டை மாவட்டம்.

2. ஆற்காடு நகராட்சி ஆணையர்,
   ஆற்காடு வட்டம், இராணிப்பேட்டை மாவட்டம்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4. ஒருங்கிணைப்பாள்ர்(Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல். மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சட்ட ஆலோசகர்/செயலாளர்(முகூபொ)